**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 219/2021**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| த/பெ | சுப்பராயன் | வயது | |
| ஊர் | | தேதி | 29.08.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (29.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான்தற்பொழுது 3 இன சொத்துக்களுக்காக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யும்போதே 5 இன சொத்தினை கூறியிருந்தேன். ஒரு இன சொத்தானது மனை மற்ற இரண்டு சொத்தானது நிலம் . இரண்டு இன சொத்துக்கள் கோவில் சொத்துக்கள் என்று பிரதிவாதிகள் அவர்களது ஆட்சேபனையில் தெரிவித்ததால் அதனை ரத்து செய்கிறேன் என்றால் சரி . பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் வழக்கில் சேர்க்கபட வேண்டிய நபர்கள் சேர்க்கப்படாமல் உள்ளனர் என்று சில பேர்களை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவர்களை சேர்க்க நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிகள் குடும்பத்திற்கு சம்மந்தம் இல்லாத நபராக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . சம்மந்தம் இருப்பதால் தான் வழக்கினை போட்டுள்ளேன். வழக்கு சொத்தினை நான் கூறுவது போல் பாதி பாக சொத்து

எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தன் என்பவர் யார் என்றால் அவர் எனது சகோதரர். கோவிந்தன் என்பவருக்கு எனது அக்கா பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததாக நான் வாக்குமூலததில் சொல்லியுள்ளேன் அது தொடர்பான நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன் அவ்வாறு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன் . எனது அக்காவின் பெயர் கோவிந்தம்மாள் . கோவிந்தம்மாள் எனக்கு ஆவணம் ஏதேனும் எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . இந்த வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram